வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்

व.उ.चिदम्बरनार पत्तन न्यास

V.O.Chidambaranar Port Trust

(Ministry of Shipping, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office

ISO9001:2015, ISO 14001 : 2015,
OHSAS 18001:2007 & ISPS Compliant Port

SAGARMALA
PORT-LED PROSPERITY

Press Release No: 23 date: 07.06.2020

**Indian Navy Ship 'Jalashwa' arrives at V.O. Chidambaranar Port, Tuticorin, with 700 Stranded Indian nationals from Maldives**

Today on 07.06.2020, Indian Navy Ship 'Jalashwa' repatriated 700 Indian nationals from Maldives as a part of the ongoing 'Samudra Setu' mission by the Government of India to evacuate Indians stranded in different parts of the world by Sea.

INS 'Jalashwa' had departed from 'Port of Male', Maldives at around 2130 hrs., on 05.06.2020 and arrived at outer anchorage of VOC Port at 0900 hrs and was subsequently docked at Berth No.14 at 0930 Hrs. Among the 700 number of Indian nationals disembarked at the VOC Port, 655 are male and 45 are female.




On arrival, the evacuees from Maldives were screened by the Port Health Officials and their luggages were sanitized. On issue of PPE kits by the Port to all passengers, the passengers were boarded into 25 waiting buses and transited to Passenger terminal. On reaching the passenger terminal, self-declaration forms were obtained from the passengers and were asked to download and configure 'Aarogya Setu' app in their smartphones, using the free Wi-fi provided by the Port Authority. Thereafter,

immigration and Customs formalities were completed and the passengers were guided to the respective buses for their onward destinations. Refreshment breakfast and lunch for all the passengers were jointly arranged by the Port Authority and District Administration.

This is the second call by INS Jalashwa to VOC Port Tuticorin, which had earlier repatriated 686 Indians from Colombo on 02.06.2020.

The entire operations were meticulously guided by Shri T.K. Ramachandran, I.A.S, Chairman, V.O. Chidambaranar Port Trust, Shri Sandeep Nanduri, I.A.S., District Collector, Shri Arun Balagopalan, I.P.S., Superintendent of Police, Shri B. Vishnu Chandran, I.A.S, Additional Collector, Shri Bimal Kumar Jha, Deputy Chairman, V.O.Chidambaranar Port Trust, Capt. Aasish Kumar Sharma, Commanding Officer, INS Kattabomman.

Shri T.K. Ramachandran, IAS, thanked the District Administration, Indian Navy, Customs, Immigration, PHO and Senior Officers of Port for the coordinated efforts taken for the safe repatriation of Indian nationals through VOC Port, Tuticorin.

The above details were released in a Press Release by V. O. Chidambaranar Port Trust today.

PUBLIC RELATIONS OFFICER

வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்

वं.उ.चिदम्बरनार पत्तन न्यास

ISO9001:2015, ISO 14001 : 2015,
OHSAS 18001:2007 & ISPS Compliant Port

# V.O.Chidambaranar Port Trust

(Ministry of Shipping, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office

SAGARMALA
PORT-LED PROSPERITY

பத்திரிக்கை செய்தி எண் : 23 தேதி :02.06.2020

**தூத்துக்குடியிலுள்ள வ.உ.சிதம்பரனார் துறைமுகத்திற்கு இந்திய கடற்படை கப்பல் ‘ஜலாஷ்வா’ மூலம் மாலத்தீவில் சிக்கி தவித்த 700 இந்தியர்கள் தாயகம் வந்தடைந்தனர்**

உலகளவில் தாக்கப்பட்டிருக்கும் கொரோனா வைரஸ் தொற்றின் பாதிப்பினால் வெளிநாடுகளில் சிக்கி தவித்து வரும் இந்திய குடிமக்களை தாயகத்திற்கு அழைத்து வருவதற்கு இந்திய அரசு ‘சமுத்திர சேது’ என்ற திட்டத்தின்கீழ் கப்பகளின் வாயிலாக தாயகம் அழைத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, இன்று 07.06.2020 இந்திய கடற்படை கப்பல் ‘ஜலாஷ்வா’ மாலதீவில் சிக்கி தவித்த 700 இந்தியர்களை தூத்துக்குடியிலுள்ள வ.உ.சிதம்பரனார் துறைமுகத்திற்கு அழைத்து வந்தது.



இந்திய கடற்படை கப்பல் ‘ஜலாஷ்வா’ மாலதீவிலுள்ள மாலே துறைமுகத்தில் 05.06.2020 அன்று இரவு சுமார் 2130 மணியளவில் தன் பயணத்தை துவங்கி 07.06.2020 இன்று காலை 0930 மணியளவில் வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தின் கப்பல்தளம் 14-ஐ வந்தடைந்தது. வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் வந்திறங்கிய இக்கப்பலில் 700 பயணிகளில் 655 ஆண்களும் மற்றும் 45 பெண்களும் உள்ளடங்குவர்.

இக்கப்பல் வந்தவுடன், பயணிகள் அனைவரையும் கப்பலிருந்து இறக்கப்பட்டு துறைமுக சுகாதார அமைப்பின் மூலம் மருத்துவ பரிசோதனைகுட்படுத்தப்பட்டு அவர்களது சாமான்கள் கிருமிநாசினி தெளிக்கப்பட்டது. மேலும் பயணிகளுக்கு தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை (PPE kits) வழங்கிய பின்பு அவர்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேருந்துகளில் துறைமுக பயணிகள் முனையத்திற்கு அழைத்துவரப்பட்டார்கள்.

பயணிகள் முனையத்திற்கு பயணிகள் வந்தவுடன், பயணிகளிடமிருந்து சுயஅறிவிப்பு படிவம் பெறப்பட்டது, பின்பு இலவச wi-fi இணைப்பின் மூலம் பயணிகளின் கைபேசியில் ‘ஆரோக்கிய சேது’ செயலியை பதிவியிறக்கம் செய்ய வலுயுறுத்தப்பட்டார்கள். இந்த இலவச wi-fi வசதியை வ.உ.சிதம்பரனார் துறைமுகம் ஏற்பாடு செய்திருந்தது. அதன் பிறகு பயணிகள் சுங்கதுறை மற்றும் குடியுரிமை துறையின் அனைத்து விதிமுறைகளின்படி சரிபார்க்கப்பட்டு பின்பு மாவட்டம் ரீதியாக பிரிக்கப்பட்டு பேருந்தில் அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும் பயணிகளுக்கு காலை உணவு மற்றும்

மதிய உணவினை வ.உ.சிதம்பரனார் துறைமுகம் மற்றும் தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

திரு. தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப. வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழக தலைவர், திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி மாவட்டம், திரு. அருண் பாலகோபாலன், இ.கா.ப. காவல்துறை கண்காணிப்பாளர், தூத்துக்குடி மாவட்டம், திரு. பி. விஷ்ணு சந்திரன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர் (கூடுதல் பொறுப்பு), தூத்துக்குடி மாவட்டம், திரு. பிமல்குமார் ஜா, வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகத் துணைதலைவர் மற்றும் கேப்டன் ஆசிஷ் குமார் சர்மா, கமாண்டிங் அதிகாரி, ஐ.என்.எஸ். கட்டபொம்மன் ஆகியோர் இந்த செயல்பாடுகள் அனைத்தையும் உடனிந்து மிக உன்னிப்பாக கவனித்து வழிநடத்தினர்.

மேலும் திரு. தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப. வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழக தலைவர் அவர்கள் இரண்டாவது முறையாக இக்கப்பல் வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சீரிய முறையில் திட்டமிட்டு செயல்படுத்தியமைக்கு தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம், இந்திய கடற்படை, சுங்கதுறை, குடியுரிமை துறை, துறைமுக சுகாதார அமைப்பு மற்றும் மூத்த துறைமுக அதிகாரிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்.

மேற்சொன்ன தகவலை வ.உ.சிதம்பரனார் துறைமுகபொறுப்புக் கழகம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி